[1979 மார்ச் 27

(இ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்னை ஒன்றை விதி 184-ன் கீழ் திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மீது கொண்டு வர அனுமதி கேட்டுள்ளார். திரு. சுப்பு அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்னையைப் பொறுத்தவரையில் ரொம்ப சிம்பிள். அதிகமான நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியது இல்லை. ரொம்பச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். அவர்கள் ஒரு உயர்நீதி மன்றத் தீர்ப்பை அவர்

misapplication of the Judgement to the situation occuring at Pollachi,

அதைத்தான் நான் எழுதிக் கொடுத்து இருக்கிறேன். அவர் சொன்னது எப்படி இருக்கிறது என்றால் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் மோசமான வேலையாக இருக்கிறது, அந்தத் தீர்ப்பிலே முதலிலும், கடைசியிலும் இருப்பதை விட்டுவிட்டு, நடுவில் இருப்பதை பிடுங்கிச் சொல்லியிருக்கிறார். இப்படி பிடுங்குகிற வேலையை அவர் செய்யக் கூடாது. எல்லாவற்றையும் சேர்த்து இந்த சபைக்கு அவர் சொன்னால், அதில் உள்ளவற்றை எல்லோரும் புரிந்து கொள்ள முடியும். இப்படிச் சொன்னால் அவர்கள் என்ன சொல்வார்கள், எனக்கு சட்ட நுணுக்கம் தெரியாது, சட்டம் தெரியாது என்று சொல்வதற்கு மன்னிப்பே கிடையாது. Ignorance of law is no excuse அந்த மாதிரி சொல்கிற அமைச்சரா என்றால், இந்த அமைச்சரைப் பொறுத்த வரையில் சட்டம் தெரியாது என்று சொல்ல முடியாது. சட்டம் தெரியாது என்று சொல்ல மாட்டார், அத்தகைய பெரிய முக்கியமான அமைச்சர் அவர். ஆகவே, நான் சொல்லவிரும்புவது பொள்ளாச்சி 'க்வாலிட்டி' மில்லில் ஒரு டி.எஸ்,பி. தலைமையில் 150 போலீசார் தேவையில்லாமல் உள்ளே போய் உட்கார்ந்துகொண்டு, தொழிலாளர்களை எல்லாம் கைது செய்து சிறையிலே அடைத்துவிட்டார்கள். தேவையிருந்து போனால் அது வேறு விஷயம். தேவையில்லாமல் அன்வாரன்டட்—உள்ளே போனார்கள் என்பது தான் குற்றச்சாட்டு. உயிருக்கோ அல்லது உடமைக்கோ அபாயம் ஏற்படும் நிலைமை இருக்கிறது என்றால் மானேஜ்மெண்ட் ரிக்குவிஷன் கொடுத்தால் அந்த நிலைமை வேறு. ஆனால் அங்கே தொழிலாளர்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்துகிறார்கள். அப்படி நடத்துவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த நேரத்தில் காவல்துறையினர் ஏன் உள்ளே போகவேண்டும்? கேட்டால் மேலிடத்து உத்தரவு என்கிறார்கள்.

ஏற்கெனவே இப்படிப்பட்ட பிரச்சினைகளில் அரசாங்கத்தின் நிலை என்ன என்பதை, டி.வி.எஸ். நிறுவனத்தைப் பொறுத்த வரையில் மின்சாரத் துறை அமைச்சரவர்கள் விளக்கியிருக்கிறார்கள். கேட் மீட்டிங், பொதுக் கூட்டம் என்பவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இரண்டு சங்கங்கள் ஒரே நிறுவனத்தில் இருந்தால் கேட் மீட்டிங், பொதுக் கூட்டம் நடத்தக் கூடாது. டி.வி.எஸ். நிறுவனத்தைப்பற்றிச் சொல்லும்போது அப்படிச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு நன்றாகத் தெரியும். பிரச்சினையைப் பற்றி மட்டும் சொல்லுங்கள். கொடுத்த தகவல் தவறு என்றால் அது எப்படி என்பதைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு: நான் தவறு என்று கூட சொல்லவில்லை. மிஸ்லீடிங் என்றுதான் சொல்கிறேன். நம்முடைய பாரத பிரதமரைக் கூட நேற்று பார்லிமெண்டில் மிஸ் லீட் செய்தார் என்றுகூட அல்ல; மிஸ் இன்பார்ம் செய்தார் என்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இங்கே நடைபெற்றிருப்பது அதைவிட 'ஓர்ஸ்ட்'. சபையை மிஸ்லீட் பண்ணியிருக்கிறார். (மணி யடிக்கப்பட்டது). நான் அதிகமாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. எப்படி மிஸ்லீட் செய்தார் என்பதை மட்டும், அது சம்மந்தப்பட்ட 'ரிலவன்ட் போர்ஷனை' மட்டும் படித்துக் காட்டுகிறேன்.

"A lawful demonstration or satyagraha would lose significance if the workmen are asked to choose a place far away from the business premises for their operation."

முதலில், சத்தியாக்கிரகமோ, போராட்டமோ அந்த தொழிற்சாலைக்கு அப்பால் இருக்கக்கூடாது; ரொம்ப தூரத்திற்கு அப்பால் போய் விட்டால் அது 'லூஸ் தி சிக்னிபிகன்ஸ்' என்று சொல்கிறார். சொன்னது நம்முடைய ஜட்ஜ் அல்ல; அது கேரளா ஜட்ஜ்.

"A lawful demonstration or satyagraha would lose significance if the workmen are asked to choose a place far away from th business premises for their operation."

[திரு. க. சுப்பு] [1979 மார்ச் 27

அதை விட்டுவிட்டார். அதிலே அந்த மானேஜ்மெண்டார் சார்பில் அவர்கள் உள்ளே போகும்போது தடுக்கப்பட்டு, அவர்களுடைய உயிருக்கோ உடமைக்கோ அபாயம் இருக்கிறது என்று சொன்னால் அவர் களுக்கு அந்த அளவுக்கு மட்டும் பாதுகாப்பு. மானேஜ் மெண்டாரை உள்ளே போகவிடலாம்; வெளியே வரவிடலாம். அதிலே இவர் எப்படி மிஸ்லீட் பண்ணினார்? நான் சொல்லவில்லை; ஜட்ஜ் சொல்கிறார். அஃப் கோர்ஸ் என்று ஒரு இடத்தில் வருகிறது. அதை எடுத்துக்கொண்டார்.

"The management can of course claim that the ingress and egress to to their business premises should be protected from obstruction and if there is imminent danger or peril to life or property police should affered such protection as necessary to avert such harm."

இவ்வளவு க்ளீயராக சொன்னதைக்கூட மந்திரி இங்கே தவறான முறையில் இந்த அவையை மிஸ்லீட் செய்கிற வகையில் கூறி யிருக்கிறார். அதற்குமேல் ஒரு அங்குலம் கூட செல்லமுடியாது வாத்தியாரே (சிரிப்பு). இனன்ட் டேஞ்சர்—உடனடி அபாயம் இருக்கிறது என்று சொன்னால்தான் பாதுகாப்பு. ஆனால் அதை விட்டுவிட்டு இவர் இடையிலே இருந்து எடுத்துக் கொள் கிறார்.

"I make it clear that beyond this the police shall not interfere in the matter of the satyagraha or the strike carried on by the workmen.

சப்ரஷன் ஆஃப் மெட்டீரியல் பர்டிகுலேர்ஸ், மிஸ் லீட்—பெரிய தப்பு.

I am glad that learned Council Sri T.C.N Menon has undertaken that the police shall act in the spirit of what has been said there.

நீதிபதி சொன்ன அந்த ஸ்பிரிட்டில்தான் போலீசார் இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுக்கு அமைச்சராகத்தான் இருக்க முடியுமே தவிர வாத்தியாராக இருக்க முடியாது. நீங்கள் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

1979 மார்ச் 27]

திரு. க. சுப்பு : வாத்தியார் என்பது செல்லப்பெயர்தான் இன்னும் ஒன்றிரண்டு வார்த்தைகளை மட்டும் குறிப்பிட்டு விட்டு, முடித்துவிடுகிறேன். ஜட்ஜ் கொடுத்தது 'க்வாலிஃபைடு ஸ்டேட்மென்ட்' தான். ஆனால் அமைச்சர் முன்னால் இருந்த பகுதியையும், பின்னால் இருந்த பகுதியையும் விட்டுவிட்டு, இடையிலே இருந்து சில போர்ஷன்களை மட்டும் எடுத்து கொண்டு, 'சப்ரஷன் ஆஃப் மெட்டீரியல்ஃபாக்ட்ஸ்' செய் திருக்கிறார். மிஸ்லீடிங் பர்ப்பசுக்காக அப்படி செய்திருக்கிறார் இது உரிமை மீறியசெயலாகும். ஆகவே, அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் காலையில் என்னிடம் திரு. சுப்பு அவர்கள் வந்து எல்லா தகவல்களையும் கேட்டார்கள். இந்தக் கேஸ் லா பற்றி அவருக்குத் தெரியாது என்றும் ஆகவே அது பற்றி எல்லா விவரங்களையும் கேட்டார்கள். அதாவது 1975 I எம்.எல்.ஜே. என்பனவற்றின் விவரங்களை எல்லாம் அவருக்குத் தெளிவாக எடுத்துச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியானால் திரு. சுப்பு அவர்கள் அமைச்சரவர்களை வாத்தியார் என்று குறிப்பிட்டது சரிதான், அது அவைக் குறிப்பிலேயே இருக்கட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலேயே ஒரே ஒரு வாத்தியார்தான் இருக்கிறார். அவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள். ஆகவே நான் அந்த பட்டத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

அடுத்து என்னிடம் விவரங்களை எல்லாம் கேட்டுவிட்டுச் சென்ற பிறகுதான் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொடுத் திருக்கிறார்கள். ஒன்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அந்த 42 ரிலவென்ட் போர்ஷனைப் படிக்கிறேன்.

The serious and tense situation prevailing in Coimbatore District following the indiscriminate arrest of the striking workers of Quality Mills in Pollachi on 19-3-79 and the virtual seizure of the Mills by hundreds of the steel-helmeted police headed by the D.S.P., Tahsildar and other officials violating all the norms and principles.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 மார்ச் 27

ஆகவே உள்ளேயே போய் போலீஸ்காரர்கள் எல்லோரையும் கைது செய்திருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்குத்தான் நான் பதில் சொன்னேன்.

24—3—1979 அன்று, பொள்ளாச்சி குவாலிட்டி ஸ்பின்னிங் மில்லில் நடைபெற்று வரும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து திரு கோபு.. .. .. (குறுக்கீடு) .. .. ..

I am so sorry. Gopu is also one of my good friends. Old habits die hard.

மாண்புமிகு திரு சுப்பு அவர்கள் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நான் பேசும்போது அந்த மில்லில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக் காரணமாக இருந்த 80 தொழிலாளர்களை கைது செய்யும்படி ஏற்பட்ட சூழ்நிலையைத்தான் குறிப்பிட்டேன். அமைதியாக உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த 24 தொழிலாளர்கள் கைது செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன். தொழிலாளர்கள் சத்தியாகிரகம் வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டிருக்கும்போது எந்தெந்த சந்தர்ப்பங்களில் போலீசாரை தலையிட அழைக்கலாம் என்பது பற்றி குறிப்பிட்டிருந்த கேரள உயர்நீதிமன்ற தீர்ப்பு ஒன்றினையும் இது சம்பந்தமாக எடுத்துக் காட்டியுள்ளேன். உயிர் அல்லது உடமைகளுக்கு உடனடியாக ஆபத்து விளையும் என்ற சூழ்நிலையில், அவைகளைத் தவிர்க்கும் பொருட்டு, வேண்டிய அளவு போலீசார் தலையிடலாம். இதே நியதித்தான் குவாலிட்டி மில்ஸ் விஷயத்திலும் பின்பற்றப்பட்டது. 20—3—1979 அன்று தொழிற்சாலைக்குள் அமைதியாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்த 24 தொழிலாளர்கள் கைது செய்யப்படவில்லை என்று அறிவித்து உள்ளேன். எனவே வேறுபட்ட கருத்துக்கள் ஏதும் என்னால் கூறப்படவில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே உரிமைப் பிரச்சினைக்கு இடம் இல்லை என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஒன்றை மட்டும்...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவ்வாறு சொல்வதற்கு அனுமதி கொடுக்கப்படுவதில்லை. நீங்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பினீர்கள். அதற்கு அமைச்சரவர்களும் பதில் சொல்லி விட்டார்கள். ஆகவே நீங்கள் இப்போது பேசக்கூடாது.

1979 மார்ச் 27]

திரு. க. சுப்பு: நான் பேசவில்லை. ஒரு சிறு விளக்கம் மட்டும். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அவ்வாறு அனுமதி கொடுப்பதில்லை உட்காருங்கள். இந்தப் பிரச்சினை குறித்த எனது தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன்.

திரு எம்.ஏ. லத்தீப்: தலைவரவர்களே, நான் ஒரு வாரத்திற்கு முன்பே நம்முடைய அமைச்சர் திரு. ராஜா முகமது அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருந்தேன். உடனடியாக அது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால் இதுவரையில் அது எடுத்துக்கொள்ளப்படவில்லையே அதற்கு என்ன காரணம் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே இல்லை. ஆகவே பிறகு இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம்.

(5) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மாயவரத்தில் பல அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாயவரம் வட்டத்தில் சுமார் 1 மாத காலமாக பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டுவருவதாலும் இதைப் பயன்படுத்திக்கொண்டு சமூக விரோதிகள் சிலர் அனாமதேயக் கடிதங்கள் எழுதி பொது மக்களுக்கு எச்சரிக்கைவிட்டு அச்சுறுத்தி வருவதாலும் அப்பகுதி மக்களிடம் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவலல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு இரெ. இராசமாணிக்கம் அவர்கள் தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து இந்த அவையினுடைய மற்றைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் ஒரு தீர்மானத்தை இந்த அவையில் தந்திருக்கிறேன். சுமார் ஒரு மாத காலமாக